

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.6.2025) பெருநகர சென்னை மாநகராட்சி சிப்பன் கட்டடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அண்ணாநகர் 3 வது நிழற்சாலையில் இணையம் சார்ந்த தற்சார்புத் தொழிலாளர்களுக்காக 25,00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட குளிரூட்டப்பட்ட ஓய்வுக் கூடத்தினை (Gig Workers Lounge) திறந்து வைத்தார். இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆப்பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், டாக்டர்.கவிமொழி என்.வி.என்.சோமு, சசிகாந்த் செந்தில், சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர் மு. மகேஷ் குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன். ஆணையாளர் நிரு.ஜெ.குமரகுருபரன, இயகந்தர் டாகடர்.டி.ஜி.வினய். வாரிய மேலாண்மை இயக்குநர் கிரண குராலா. இயக்குநர் எஸ். சிவராக. மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத்தலைவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### காவிரி டெல்டா பாசன விவசாயிகள் மகிழ்ச்சி:

# மேட்டூர் அணை : முதல்வர் இன்று திறந்து வைக்கிறார்!

**சேலம், ஜூன் 12-**

**காவிரி டெல்டா பாசனத்திற்காக இன்று மேட்டூர் அணையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்கிறார்.**

**அணையின் நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது. மேட்டூர் அணையை நம்பியுள்ள விவசாயிகள் இதனால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.**

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கன மழையால் மேட்டூர் அணைக்கான நீர்வரத்து மீண்டும் அதிகரித்துள்ளது. அணைக்கான நீர்வரத்து நேற்று முன்தினம் காலை வினாடிக்கு 4 ஆயிரத்து 753 கன அடியாக இருந்தது. நேற்று காலை அணையின் நீர்வரத்து வினாடிக்கு 6 ஆயிரத்து 119 கன அடியாக அதிகரித்துள்ளது. அணையின் நீர்மட்டம் தற்போது 113.89 அடியாக உள்ளது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 1,000 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

இம்மாவட்டங்களில் பயிர் சாகுபடிக்காக ஒவ்வொரு ஆண்டும் மேட்டூர் அணை ஜூன் 12ம் தேதி திறக்கப்படுவது வழக்கம். தற்போது அணையில் நூறு அடிக்கும் மேல் நீர்மட்டம் உள்ளதால் மேட்டூர் அணையில் இருந்து வழக்கமான நாளில் அதாவது இன்று (12.6.2025) டெல்டா மாவட்டங்களின் நெல் சாகுபடிக்காக நீர் திறக்கப்பட உள்ளது. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (12.6.2026) மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விட உள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடப்பு 2025-26ம் ஆண்டில் “குறுவை சிறப்பு தொகுப்பு திட்டம்” செயல்படுத்தப்படவுள்ளது. இயந்திர நடவு பணி மேற்கொள்ளும் ஒவ்வொரு விவசாயிகளுக்கும் ஏக்கருக்கு ரூ. 4000 வீதம் வழங்கப்பட உள்ளது. இயந்திர நடவு செய்யவுள்ள விவசாயிகள் உழவன் செயலியில் முன் பதிவு செய்திட கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் உயிரி உரம், நுண்நூட்ட சத்துக்கள் மற்றும் விதைகள் 50% மானியத்தில் வழங்கப்பட உள்ளது. இதற்கான அறிவிப்பு தமிழக முதல்வர் வரும் 15ம் தேதி தஞ்சை வருகையின்போது வெளியிடுவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

### விருதுநகர் மாவட்டம் - வடகரை கிராமத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலை

# வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**விருதுநகர், ஜூன் 12-**

**விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டம், வடகரை கிராமத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி - வழங்கி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

அவரது அறிவிப்பு வருமாறு:-

விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டம், வடகரை கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் நேற்று (11.6.2025) காலை சுமார் 9.00 மணியளவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் காரியாட்டி வட்டம், கல்குறிச்சியைச் சேர்ந்த திருமதி.சவுண்டம்மாள் (வயது 54) க/பெ.ரவி மற்றும் தண்டியனேந்தலைச் சேர்ந்த கருப்பையா (வயது 37) த/பெ. அய்யணன் ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் காரியாபட்டியைச் சேர்ந்த கணேசன் (வயது 55), முருகன் (வயது 40), திருமதி.மாரியம்மாள் (வயது 40) மற்றும் திருமதி.பேச்சியம்மாள் (வயது 38) ஆகிய நான்கு நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தி ன ருக்கு தலா நான்கு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில்

# தூய்மைப் பணியாளர் நலவாரியத் தலைவராக - திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி - பழங்குடியினர் நலவாரியத் தலைவராக - கா.கனிமொழி நியமனம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, ஜூன்.12-**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் தூய்மை பணியாளர் நலவாரியத்தின் தலைவராக டாக்டர் திப்பம்பட்டி வெ. ஆறுச்சாமி மற்றும் பழங்குடியினர் நல வாரியத்தின் தலைவராக திருமதி கா. கனிமொழி ஆகியோரை நியமித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் தூய்மை பணியாளர் நல வாரியம் மற்றும் பழங்குடியினர் நல வாரியத்தின் கீழ் ஆயிரக்கணக்கான நபர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு, அவர்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கென மருத்துவ உதவிகள், கல்வி உதவிகள், ஈமச் சடங்கு நிதி உதவி உள்ளிட்ட பல்வேறு நலத் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில், ஆய்வுக் கூட்டங்கள் அவ்வப்போது நடத்தப்பட்டு, மேற்காணும் வாரியங்கள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

மேற்காணும் இரண்டு நல வாரியங்களின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களைச் சீரான இடைவெளிகளில் ஆய்வு செய்து, திட்டங்களானது நல வாரிய உறுப்பினர்களுக்கு சென்று சேர்வதை உறுதி செய்திடவும், திட்டங்கள் குறித்து அவ்வப்போது கள ஆய்வு செய்திட ஏதுவாகவும், தற்போது தூய்மை பணியாளர் நல வாரியத்திற்கு டாக்டர் திப்பம்பட்டி வெ. ஆறுச்சாமியை தலைவராகவும் மற்றும் பழங்குடியினர் நல வாரியத்திற்கு திருமதி. கா.கனிமொழியைத் தலைவராகவும், நியமனம் செய்து அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், புதிதாக நியமனம் செய்யப்பட்ட தலைவர்களின் பதவிக் காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சே.பிரேம்ஆனந்த் தலைமையில் – திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் சார்பில்

# செம்மொழிநாள் பொதுக்கூட்டம் - நல உதவிகள் வழங்கல்!

## ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. – முல்லைவேந்தன் – அமைச்சர் சா.மு. நாசர் சிறப்புரை!

திருவள்ளூர், ஜூன்.12

திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் சார்பில் இன்று நடைபெறும் கலைஞர் 102-வது பிறந்த நாள் - செம்மொழி நாள் பொதுக்கூட்டத்தில் கழக துணை அமைப்புச் செயலாளர் ப. தாயகம்கவி எம்.எல்.ஏ., அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்டம், திருவள்ளூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ஜூன் 3 செம்மொழி நாள் விழாப் பொதுக்கூட்டம் மற்றும் நல உதவிகள் வழங்கும் விழா இன்று (12.6.2025 - வியாழக்கழிமை) மாலை 5 மணிக்கு துர்கை அம்மன் கோயில் அருகில் செவ்வாய் பேட்டையில் நடைபெறுகிறது.

இதில் ஒன்றியச் செயலாளர் சே.பிரேம்ஆனந்த் தலைமை தாங்கிட, ஞா.ரமேஷ். மு.ராஜா. பா. மகேஸ்வரி. பாலவினாயகம், எ.குட்டி (எ) பக்தவச்சலு, இ.என்.சேகர், ஆர். திலிப்ராஜ், ப.இமானுவேல் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ப.அன்பு (எ) ஆல்பர்ட், வி.உதயகுமார், எஸ்.செந்தில் குமார், டி.கனிஸ்கர் ஆகியோர் வரவேற்கின்றனர்.

கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., தலைமைக் கழகப் பேச்சாளர் முல்லைவேந்தன், அமைச்சர் ஆவடி ஆவடி சா.மு. நாசர், மாநில ஆதி திராவிடர் நலக்குழு செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், பிரபு கஜேந்திரன், சி.ஜெரால்டு, சட்டமன்றத்தொகுதி பார்வையாளர் PTC.செல்வராஜ், மாநில சி.ந.உ.பி.செயலளர் மாவட்ட கழக நிர்வாகிகள் நடுக்குத்தகை ம.இராஜி, V.J.சீனிவாசன்,

எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதரன், தொழுவூர் பா.நரேஷ்குமார்,

பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், G.விமல், வர்ஷன்,

எம்.முத்தமிழ்செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன்,

காஞ்சனா சுதாகர், எஸ். சங்கர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

செல்வி சௌந்தர்ராஜன், ப.அன்புச்செல்வன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் மேலூர் சட்டமன்ற தொகுதி கொட்டாம்பட்டி ஒன்றியத்திற்குட்பட்ட கச்சிராயன்பட்டி ஊராட்சி, வஞ்சிநகரம் ஊராட்சி மற்றும் கம்பூர் ஊராட்சிப் பகுதியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நலத்திட்ட உதவிகளை வழங்கினார் உடன் கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் உள்ளனர்

# முதலமைச்சரின் வலியுறுத்தலின்படி - கச்சத்தீவை மீட்க நடவடிக்கை எடுத்திடுவீர்!

## பிரதமருக்கு டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

**சென்னை, ஜூன்.12-**

**வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீரசாமி கச்சத்தீவை மீட்டுத் தரும்படி பிரதமர் மோடி அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில் அவர் கூறியுள்ளதாவது :

இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையயே உள்ள பால்க் நீரிணைப்பகுதியில் அமைந்துள்ள 285 ஏக்கர் பரப்புள்ள கச்சத்தீவு இந்தியாவுக்கு சொந்தமானது. மனிதர்கள் யாரும் வசிக்காத இந்த சிறிய தீவை, தமிழ்நாடு மீனவர்கள் தாங்கள் மீன்பிடிக்கச் செல்லும்போது, இளைப்பாறவும் தங்கள் மீன்பிடி வலைகளைக் காய வைக்கவும் பல நூற்றாண்டுகளாகப் பயன்படுத்தி வந்தனர். ஆனால் ஒன்றிய அரசு, 1976 ஆம் ஆண்டு இலங்கையோடு கடல்சார் எல்லைகளை நிர்ணயிக்க செய்து கொண்ட ஒப்பந்தத்தின்போது, இந்த தீவை இலங்கை அரசுக்குக் கொடுத்து விட்டது. இதனால் தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திய மீனவர்கள் இந்த தீவுக்குச் செல்லவும், அதன் வழியாக கடலுக்குள் சென்று மீன் பிடிப்பதற்கும் தடை செய்யப்பட்டுள்ளது. இதனால், கடந்த 50 ஆண்டுகளாகத் தமிழ்நாடு மினவர்கள் தங்கள் மீன்பிடி தொழில் பல்வேறு இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர்.



சென்னை மேற்கு மாவட்ட திமுக முன்னாள் செயலாளர் மறைந்த தீரர் ஜெ.அன்பழகன் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தி.நகர் மேட்லி சாலை மனமகிழ் மன்றத்தில் இருந்து கண்ணம்மாள் பேட்டை உள்ள அவரின் நினைவிடம் வரை மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் அமைதி பேரணி நடைபெற்றது. பின் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி. பொதுமக்களுக்கு மதிய அறுசுவை உணவு வழங்கினார். நிகழ்ச்சியில் பகுதி செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கே. ஏழுமலை எம்.சி., நந்தனம் மதி எம்.சி., எஸ்.முரளி, அகஸ்டின்பாபு, வே.ராஜன் தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் ஜெ.ஜானகிராமன், கோ.சு.மணி, ஜி.டி.அம்பேத்கர், வட்ட செயலாளர்கள், அனைத்து அணிகளை சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்துகொண்டனர்

இதுகுறித்து கடந்த 02.04.2025 அன்று, தமிழ்நாடு சட்டப் பேரவையில், தமிழ்நாடு அரசு, இந்த கச்சத்தீவை உடனடியாக மீட்கத்தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி ஒன்றிய அரசுக்குக் கோரிக்கை வைத்து, அ.தி.மு.க மற்றும் பி.ஜே.பி. உள்ளிட்ட அனைத்துக் கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் தீர்மானம் இயற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பியுள்ளது தங்களுக்கு நினைவிருக்கும் என்று கருதுகின்றேன்.

அந்தத் தீர்மானத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒரு காலத்தில் இந்திய மீனவர்களும் இலங்கை மீனவர்களும் சேர்ந்து பயன்படுத்திய இந்தப் பகுதியில் தற்போது, தமிழ்நாடு மீனவர்கள் அவ்வப்போது இலங்கை இராணுவத்தினால், எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் குற்றம் சாட்டி கைது செய்வதும், தாக்கப்படுவதும் தொடர் நிகழ்வுகளாகி விட்டதைத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

கடந்த 2024 ஆம் ஆண்டில் மட்டும் அய்நூறுக்கும் மேற்பட்ட இந்திய மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். ஏறத்தாழ நாளொன்றுக்கு இரண்டு மீனவர்கள் வீதம் சென்ற ஆண்டில் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் அவர்கள் கூட இன்னமும் 97 மீனவர்கள் இலங்கைச் சிறைகளில் இருப்பதாக ஒத்துக் கொண்டுள்ளார். மேலும், தமிழ்நாடு மீனவர்கள், அடிக்கடி இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுவதும் அவர்கள் வாழ்வாதாரங்களான படகுகளும், மீன்பிடி வலைகளும் பறிமுதல் செய்யப்படுவதும் நடந்து வருவதாகக்



கூறியுள்ளார். 2014 ஆம் ஆண்டு தாங்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் ஒரு மீனவர் கூட இலங்கைப்படையினரால் தாக்கப்படவோ, அச்சுறுத்தப்படவோ மாட்டார்கள் என்று கூறிய வாக்குறுதிக்கு மாறாக இது தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

இதனால்தான், எங்களது முதலமைச்சர் அவர்கள் கூட தமிழக மீனவர்கள், என்பவர்கள் இந்திய நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் என்பதை ஒன்றிய அரசு மறந்துவிடுகிறது போல தெரிகின்றது என வேதனையுடன் குறிபிட்டுள்ளார். மேலும் இந்த பிரச்சனையை ஒன்றிய அரசு பிராந்தியக் கண்ணோட்டத்துடன் பார்க்காமல், இந்திய நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையே, அதாவது இரு நாடுகளுக்கிடையே உள்ள பிரச்சனையாக அணுக வேண்டும், நமது இந்திய குடிமக்களாக உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்தியக் குடிமக்களன் வாழ்வுரிமைச் சார்ந்த பிரச்சனையாகவும் பார்க்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூறி யுள்ளார்.

இந்நிலையில் பொது மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு, பிரதமர் அவர்கள் கச்சத்தீவை மீண்டும் திரும்பப் பெறுவதற்கான ராஜிய நடவடிக்கைகளை உடனே மேற்கொண்டு இந்திய மீனவர்களின் உரிமைகளை நிலை நாட்டும் வண்ணம் நல்ல தீர்வைக் காணவேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துரை சாம்பசிவம்

**ஜூன் 12 (2016)**



**வேலூர் மாவட்டத்தில், கழகத்தின் தொடக்கக் காலத்திலேயே ஆசிரியர் பணியை உதறிவிட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**1957–ல் பேரறிஞர் அண்ணாவால் அடையாளம் காணப்பட்டு குடியாத்தம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டவர்.**

**கே.வி.குப்பம் ஒன்றியச் செயலாளராக தொடர்ந்து 15 ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.**

**வேலூர் மாவட்ட ஊராட்சித் தலைவராகவும் – கீ.வ.குப்பம் ஒன்றிய பெருந்தலைவராகவுமம் – முருக்கம்பட்டு ஊராட்சி மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். மிசா கைதியாகவும், அதற்கு முன்னர்1962–ல் விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் கைதாகி, அறிஞர் அண்ணாவுடன் வேலூர் சிறையில் இருந்தபோது, அண்ணாவால் “தாடிக்காரர்’என அழைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**